# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 02.04.2025**

**முன்னிலை**

**திரு ரா.பிரியகுமார், B.Sc.,B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-6262/A/2024**

திரு. S.சஞ்சய்குமார் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர் ,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
பெரம்பூர் மண்டலம்,,
சென்னை-600 011. -- பொது அதிகார அமைப்பு

# ஆணை

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு. S.சஞ்சய்குமார், நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | திரு.N. பாலகுமார்,<br>பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,<br>உணவுப்பொருள் வழங்கல் மற்றும்<br>நுகர்வோர் பாதுகாப்புத் துறை<br>நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 20.09.2023 |
| மனுதாரர், புதிய குடும்ப அட்டை வழங்குவது தொடர்பான தகவல்களை 3 இனங்களில் கோரியுள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.10.2023 |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 26.10.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 10.11.2023 |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 07.02.2024 |
| விசாரணை அழைப்பாணை நாள் | 02.04.2025 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனக்கு குடும்ப அட்டை எப்போது வழங்கப்படும் என்றும், இதுவரை புதிய குடும்ப அட்டை வழங்கப்படாமைக்கான காரணத்தையும் கோரினார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் திரு.N.பாலகுமார், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பெரம்பூர் மண்டலம், சென்னை-11 அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் ந.க.எண்.அ1/12250/2023, நாள் 10.10.2023 என்ற கடிதத்தின் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கியதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அதில், புதிய குடும்ப அட்டை விசாரணை அறிக்கை தொடர்பாக களப்பணியாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் அளிக்கும் வசதி குடும்ப அட்டை தரவுதளத்தில் முடக்கத்தில் உள்ளதாகவும், அம்முடக்கம் விடுவிக்கப்பட்டவுடன் ஆன்லைனில் களப்பணியாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்படும் என்றும் அந்நிலையில் மனுதாரரின் விண்ணப்பத்தின் நிலையை அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

**4.** மனுதாரரின் தகவல் கோரும் பிரிவு 6(1)-ன் கீழான மனு, பொதுத் தகவல் அலுவலரின் வாதுரை ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், **மனுதாரர் கோரிய இனங்களுக்கு உரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் வழங்கியுள்ளதாக ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-6262/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/மேலாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
பெரம்பூர் மண்டலம்,
சென்னை-11.

**<u>மனுதாரர்</u>**
திரு. S.சஞ்சய்குமார் / S.பூஜா,
எண்.820, 12-வது கிழக்கு குறுக்குத் தெரு,
மகாகவி பாரதி நகர்,
சென்னை 600 039.

KRM/PA 09.04.2025